புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
June-2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS

=====================================================================

# குமரி மாவட்ட நாவல்களில் திணையும் முதற்பொருளும்

*எஸ்.ஜே. பிரதீபா*
*பதிவு எண் : 21113114022037*
*தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வு மையம்,*
*நேசமணி நினைவு கிறித்தவக் கல்லூரி,*
*மார்த்தாண்டம் - 629165.*
*குமரிமாவட்டம்.*

*முனைவர் செ.செல்வகுமார்.*
*நெறியாளர் & இணைப்பேராசிரியர்.*
*தலைவர். தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வு மையம், நேசமணி நினைவு கிறித்தவக் கல்லூரி,*
*மார்த்தாண்டம்.-629165.*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,*
*திருநெல்வேலி.*

=====================================================================

*ஆய்வுச்சுருக்கம்*

*குமரிமாவட்ட நாவல்கள் தொல்காப்பியர் குறிப்பிடும் திணைக் கோட்பாடுகளுக்கு உட்படுகின்றன என்பதை நிறுவ முயலும் இக்கட்டுரை அவற்றில் வெளிப்படும் திணை மற்றும் முதற்பொருள் குறித்து ஆராய்கிறது. குறிப்பாக திணைக்கோட்பாடு 21-ஆம் நூற்றாண்டில் வெளிவந்த எல்லா உரைநடைப் படைப்புகளுக்கும் பொருந்தும் என்ற கருதுகோளின்படி இக்கட்டுரையின் ஆய்வு அமைந்துள்ளது.*

*இக்கட்டுரையில் தொல்காப்பியம் குறிப்பிடும் திணையும் பொருளும் குறித்துப் பேசப்படுவதுடன் முதற்பொருளான நிலமும் பொழுதும் குறித்தும் பேசுகிறது. முக்கியமாக குமரிமாவட்ட நாவல்களும் திணைப் பொருண்மைகளும் என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரைக்கு அடிப்படையான ஐந்து நாவல்களைத் தேர்வு செய்து அதனடிப்படையில் தொல்காப்பியம் சுட்டும் கருத்துகள் நாவலோடு பொருத்தி ஆராயப்பட்டுள்ளது.*

## *முன்னுரை*

*தமிழ்மரபில் இலக்கண இலக்கியங்களுக்கு அடிப்படையாக இருப்பது தொல்காப்பியமாகும். இலக்கியப் படைப்புகளுக்கு உரிய கோட்பாடுகளையும் உத்திகளையும் வழங்கிய பொருளதிகாரம் திணைக்கோட்பாட்டையும் உருவாக்கித் தந்தது. திணை என்பதற்கு நிலம், இடம், வீடு, குலம், ஒழுக்கம் எனப் பல பொருள்கள் உண்டென்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி கூறுகிறது. "திணை இலக்கணம் தமிழுக்கே உரியது. பிறமொழிக்கண் காணப்பெறாதது என்பர் சிவஞானமுனிவர்." (பாலசுப்பிரமணியன், கு.வெ. சங்க இலக்கியக் கொள்கை. ப:244)*

*தற்காலத்தில் தொல்காப்பியத்தின் வழியிலான திணைக்கோட்பாடு மலையாளக் கவிஞரான ஐயப்பபணிக்கர் போன்ற அறிஞர்களால் விரிவாக்கம் செய்யப்பட்டு சமகால படைப்பிலக்கியங்களில் பொருத்தி ஆராயப்படுகின்றன. இது குறித்து பேராசிரியர் சிவக கூறும் போது "தொல்காப்பியத்தின் வழி வருவிக்கப்பட்ட, "திணைக் கோட்பாடு பொதுமைப்படுத்தப்பட்டு விசால நோக்குடன் 21-ஆம் நூற்றாண்டின் உரைநடைப் படைப்புகளுக்கும் பயன்படுத்தப்பட்டன. தமிழ் இலக்கியங்களுக்கு என்றில்லாமல், உலகிலுள்ள எல்லா மொழிப் படைப்புகளுக்கும் திணைக் கோட்பாடு தன் பங்களிப்பைச் செய்யும்." (சிவசு, திணையும் திறனாய்வும், 2017 ப:18) என்கிறார்.*

## *திணையும், பொருளும்*

*தொல்காப்பியம் அகத்திணையியல் திணைகளை கைக்கிளை முதல் பெருந்திணை வரை ஏழாக வரையறுக்கிறது. இதில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்தும்*

'நடுவண் ஐந்திணை' எனப்படுகின்றன. திணைக்குரிய வகைகளில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றும் அகத்திணைக்கு உரியனவாக வகுக்கப்பட்டுள்ளன.

முதற்பொருள் என்பவை நிலமும் பொழுதும் ஆகும். கருப்பொருள் என்பவை தெய்வம், நிலத்தின் விளைபொருள், விலங்கு, பறவை, மரம், பறை, தொழில், நிலத்துக்குரிய யாழ் போன்ற பிறவுமாகும். உரிப்பொருள் என்பது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் போன்றவையும் இவற்றின் நிமித்தமும் ஆகும். இவற்றில் பாட்டின் திணையை முடிவு செய்வது உரிப்பொருளே ஆகும் என்கிறார் இளம்பூரணர். இந்த ஐந்திணைகளில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கிற்கு மட்டும் முதற்பொருளாகிய நிலம் உண்டு. பாலைக்கு நிலம் இல்லை.

முதற்பொருள்

முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் ஆகும். குறிஞ்சிக்குரிய நிலம் மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும். முல்லைத் திணைக்குரிய நிலம் காடும் காடு சார்ந்த இடமு ஆகும். மருதத் திணைக்கு உரிய நிலம் வயலும், வயல் சார்ந்த இடமும் ஆகும். நெய்தல் திணைக்குரிய இடம் கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகும். பாலை திணைக்குரிய நிலம் மணலும் மணல் சார்ந்த இடமும் ஆகும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை திணைகளின் சிறு பொருதுகள் முறையே யாமம், மாலை, வைகறை, ஏற்பாடு (பிற்பகல்) நண்பகல் என்பனவாகும். இவற்றின் பருவங்களாக கூதிர்காலம், கார்காலம், மருதத்திற்கும் நெய்தலுக்கும் எல்லா பருவங்களும் மற்றும் பாலைக்கு வேனிற்காலம் என அமைந்துள்ளன.

குமரிமாவட்ட நாவல்களும் திணைப்பொருண்மையும்

திணை அடிப்படையில் ஒட்டுமொத்த பொருண்மையின் அடிப்படையில் குமரி மாவட்டத்திலுள்ள நாவல்களை வகைப்படுத்தும் அளவுக்கு வித்தியாசங்களும், வகைப்பாடுகளும் கொண்ட நாவல்கள் பல உள்ளன. அதற்கு அடிப்படையாக இருப்பது குமரி மண்ணின் வளமான இயற்கை பின்னணியும், காலநிலைகளும் ஆகும். குமரி மாவட்டத்தில் அதற்குரிய நிலவியல் சூழல் மிகுதியாகக் காணப்படுகிறது. தமிழகத்தில் பாலைத்திணை இல்லாத ஒரே மாவட்டம் குமரி மாவட்டமாகும். இங்கு மூன்று கடல்களும் நான்கு நிலங்களும் அமைந்து காணப்படுகின்றன.

திணைப் பொருண்மையின் அடிப்படையில் குறிஞ்சித் திணைக்குரிய நாவலாக அழகுமித்ரனின் 'காட்டுத்தனம்' என்ற நாவலைக் கூறலாம். இதில் குமரி மாவட்டத்தின் மேற்குமலைத் தொடர்ச்சியிலுள்ள தண்ணீர்பாறைஓடை, மணியடிச்சான் பாறை, யானை நக்கிப்பாறை, கரடிக்குகை. குறவஞ்சோலை, தேக்குமரக்கூப்பு, கடுவாஊத்து, அடுப்புக்கல்லுமொட்டை, வெள்ளப்பாறை போன்ற பல மலையும் மலையைச் சார்ந்த இடங்களும் இடம்பெறுகின்றன.

முல்லைத் திணைக்குரிய நாவலாக ஜெயமோகன் எழுதிய காடு நாவல் திகழ்கிறது. இந்த நாவல் நீலி மலையின் அடிவாரத்திலுள்ள காட்டுப் பகுதிகளில் வாழும் விலங்குகளையும் மரங்களையும் இவற்றைச் சார்ந்து இயங்கும் மனிதர்களையும். அவர்களின் வாழ்வியலையும் பேசுகிறது.

மருதத் திணைக்குரிய நாவலாக நாஞ்சில் நாடனின் 'மாமிசப்படைப்பு' திகழ்கிறது. இதில் நாஞ்சில் நாட்டிற்கே உரித்தான பாசன முறைகள், நீர் நிலைகள், நெல் வகைகள், விவசாய வாழ்க்கை முறையில் நிலவும் சிக்கல்கள் நிலப்பண்ணையாளர்களின் ஆதிக்கங்கள் ஆகியவை எடுத்துரைக்கப்படுகின்றன.

நெய்தல் திணைக்குரிய நாவலாக கிறிஸ்டோபர் ஆன்றணி எழுதிய ‘துறைவன்’ நாவல் நிகழ்கிறது. இதில் மீனவ சமுதாய மக்களின் வாழ்வியலோடு வரலாற்றுச் செய்திகளும் அவர்களுக்கான அரசியலும் பேசப்படுகிறது.

பாலைத் திணைக்குரிய நாவலாக குமாரசெல்வாவின் ‘குன்னிமுத்து’ நாவல் திகழ்கிறது. இதில் பாணைத்திணை எங்ஙனம் பொருந்துகிறதென்றால் குறிப்பிட்ட வயது வந்தும் பருவமடையாத இருளி என்ற பெண்மணியின் வறட்சியான உடல் குறித்து எழுதியதால் ஆகும்.

*இவ்வாறாக இந்த ஐந்து நாவல்களின் பொருண்மையும் குறிப்பிட்ட ஐந்து திணைகளுடன் பொருத்தம் கொள்வதாக உள்ளன.*

*குறிஞ்சித் திணை*

*குமரிமாவட்டத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையையும் அதன் பின்னணியையும் வைத்து எழுதப்பட்ட மலையும் மலைசார்ந்த நாவல் 'காட்டுத்தனம்' ஆகும். இதனை அழகுமித்ரன் என்பவர் எழுதியிருக்கிறார்.*

*இந்த நாவலில் பெரும்பாலும் மலை என்பது குமரிமாவட்ட மொழியில் பாறை என்ற பெயரில் இடம்பெறுகிறது. நாவல் கட்டும் தாடகை மலை, கஞ்சி பாறை, தண்ணீர்ப்பாறை, மணியடிச்சான் பாறை, யானை நரங்கிப்பாறை, வெள்ளப்பாறை என பல மலைகள் இடம்பெறுவதைக் காணலாம். ஒவ்வொரு பாறையைக் குறித்தும் அதன் பெயருக்கான காரணத்தை நாவலாசிரியர் விவரித்துக்கொண்டே செல்கிறார்.*

*தாடகை மலையைப் பற்றிக் கூறும்போது அதனை தூரத்திலிருந்துப் பார்த்தால் ஒரு பெண் படுத்திருப்பதைப்போல தோன்றும். தாடகை என்ற அரக்கி சாய்ந்த இடமென்றும் அவளே மலையாகிப் போனதாகவும் கூறுகிறார். இதில் மேற்கூறிய மலைசார்ந்த இடங்கள் நிலமாக வருகிறது.*

*பெரும்பொழுதாக நாவலில் வரும் கூதிர்காலம் இதனோடு பொருத்திப் பார்க்கையில் பன்னிரண்டாவது இயலில் மலையின் குளிர்ச்சியும். மழைக்சாரலும் நாவலாசிரியரால் வருணனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.*

*சிறுபொழுதான யாமம் நாவலில் பல இடங்களில் வருகிறது. தனம் என்பவள் நள்ளிரவில் படுக்கையிலிருந்து எழுந்து நடுவீட்டிற்கு வந்தாள். அப்போது அவளது தாயார் "என்னடி அத்த ஜாமத்துல எழும்பி லாந்திட்டு நிக்கிற?" என்று கேட்டாள். உடனே மலைக்குப் போய் கடுக்காய் பறிக்கச் செல்வதாக அவள் கூறுகிறாள். இவ்வாறாக இந்த நாவலில் குறிஞ்சித் திணைக்குரிய நிலமும் பொழுதுகளும் மிகச் சரியாக இடம் பெறுவதைக் காணலாம்.*

*முல்லைத் திணை*

*முல்லைத் திணைக்கு ஓட்டுமொத்த உதாரணமாய் திகழும் நாவல் ஜெயமோகன் எழுதிய 'காடு' ஆகும். காட்டின் வியாபகத் தன்மையையும், மரபையும் திணையின் கூறுகளையும் இந்த அளவுக்கு தமிழில் விவரித்து எழுதிய நாவல் வேறு இல்லை எனலாம்.*

*காடு குறித்து, ஜெயமோகன் எழுதும் போது "காடு திசைகள் இல்லாதது. ஏனெனில் மொத்த காடுமே வானம் என்ற ஒரே திசையை நோக்கி எழுந்து கொண்டிருப்பது. பெரும் மரங்கள் முதல் சிறு புற்கள் வரை கிடைத்த இடைவெளிகளையெல்லாம் நிரப்பியபடி வானம் நோக்கி எம்பிக் கொண்டிருக்கின்றன. அங்கே பக்கவாட்டில் திசை தேடும் மனிதன் அபத்தமான ஓர் அன்னியன்" (ஜெயமோகன், காடு, ப51) என்று கூறுகிறார்.*

*'காடு' நாவலில் பெரும்பொழுதாக பல இடங்களில் கார்காலம் மிகப் பொருத்தமாக அமைகிறது. கதைச் சொல்லியும் பார்வை வழி ‘‘சட்டென்று மழை போல நீர்த்துளிகள் கொட்டின தலைக்குமேலே பெரிய காற்று ஒன்று சென்றது போலும், விழுந்த நீர்த்துளிகளில் சிறிய பூக்களும் கலந்திருப்பதைக் கண்டேன்" (மேலது1:43 என்னும் இடத்தில் பெரும்பொழுது இடம் பெறுகிறது.*

*இந்த நாவலில் ஓரிடத்தில் பெரும்பொழுதும் சிறுபொழுதும் சேர்ந்தே இடம்பெறுகிறது. அதில், ‘‘நிலவு தெரியவில்லை. மாலை மழைமேகம் வானை மூடியிருந்ததை நினைவு கூர்ந்தேன்" (மேலது, ப: 141) என்னும் இடத்தில் இடம்பெறுகிறது.*

*மருதத்திணை*

*மருதத்திணைக்கு பொருத்தமான குமரி மாவட்ட நாவல் நாஞ்சில்நாடன் எழுதிய 'மாமிசப்படைப்பு' ஆகும். இந்நாவலில் மருதநிலம் அதன் இயற்கையோடு இயல்பு குன்றாத வகையில் கூறப்பட்டிருந்தாலும் பொழுதுகளோடு பெருத்த தொடர்புடையவைகளாக அமைந்து காணப்படுகின்றன.*

*நாஞ்சில் நாட்டின் நடுப்பகுதியில் அமைந்த சிற்றூரான மாங்கோணம் என்ற கதைத்தளத்தை விவரிக்கும்போது, "மேற்குப் பக்கம் மஞ்சள் பாறைமலை. வடமேற்கே கிடார*

ஊத்து மலை, முக்கூடல் மலை, கிழக்குத் தொடர்ச்சி மலையின் தூண்டுகளான அசம்புமலை, தாடகை மலை வடக்கே அது தொடர்ந்து மருத்துவாழ் மலை வரை நீளும். வடக்கு மலையில் உலக்கை அருவியில் மழைக்காலத்தில் 'சோ' வென்று வெள்ளம் கொட்டும். கோடை காலத்தில் நாசி அடைப்புக்காரனின் மூக்குப் போல ஒழுகும். எட்டு, பத்து மைல் தொலைவில் இருந்து பார்த்தால் நீளமான வெள்ளிக்கல் போல் அருவி தெரியும். ஆண்டில் மூன்றில் மழைக்குக் குறைவில்லை. வடக்கு மலையில் மழை விழுந்தால் சில மணி நேரத்தில் இலுப்பாற்றில் செக்கர் புரளும்." (நாஞ்சில் நாடன், மாமிசப்படைப்பு, 1999, ப:29) என்பதில் மருதத்திணையின் நிலமும் பெரும்பொழுதும் இடம்பெறுகிறது.

சிறுபொழுதான வைகறை குறித்து எழுதும் போது, "அதிகாலையில் கந்தையா வேலைக்குப் புறப்பட்டுப் போய்விட்டாலும் அடுக்களை உறியின் மீது பித்தளை வாளியில் பிட்டமுதும், சுரண்டலும், வடையும் சாதி வேறுபாடின்றி கலந்து கிடக்கும்" (மேலது, ப:23) என்பதில் வைகறை இடம்பெறுகிறது.

நெய்தல் திணை

நெய்தல் திணைக்குப் பொருத்தமான குமரி மாவட்ட நாவல் கிறிஸ்டோபர் ஆன்றணி எழுதிய 'துறைவன்' என்பதாகும். இந்த நாவலிலும் முதற்பொருளான நிலமும் பொழுதும் இணைந்து வரக்கூடிய பல பகுதிகள் நாவலில் இடம்பெறுகின்றன.

"அலைநீர் கரைமணலை தன்னோடு எடுத்துச் செல்வதனால் ஆற்றுவரப்புபோல கடற்கரை நெடுக ஒரு ஆள் உயரத்திற்கு மண்மேடு என்னும் இடிகரை உருவாகி கடற்கரையிலிருந்த வீடுகளை நோக்கி மெதுவாக நகர்ந்து வந்துகொண்டிருந்தது. இடிகரை இன்னும் சில நாட்களில் முதல் வரிசை வீடுகளை நெருங்கிவிடும். நேற்று இரவு முழுவதும் பெய்த கனமழை கூரைவீடுகளின் ஓலைகளில் வழிந்து முற்றத்தில் வடிந்து கொண்டிருந்தது. வீடுகளில் இடுக்குவழியாக ஓடிய செம்மண் கலந்த மழைவெள்ளம் கடற்கரையெங்கும் இரத்தம் போல் சகதியாகக்கிடந்தது." (கிறிஸ்டோபர் ஆன்றணி, துறைவன், ப: 26) என்பதில் நிலமும் பொழுதும் இடம்பெறுகிறது.

சிறுபொழுதான ஏற்பாடு என்னும் பிற்பகல் ஆகும். கடலில் வள்ளம் கரையிலிருந்து விலகி செல்லும் நேரம் பிற்பகலாக சுட்டப்பட்டுள்ளது.

பாலைத்திணை

பாலைத்திணைக்குத் தேர்வுசெய்யப்பட்ட குமரி மாவட்ட நாவல் குமாரசெல்வா எழுதிய 'குன்னிமுத்து' நாவல் ஆகும். இதில் பாலை திணைக்குரிய மணற்பாங்கான இடம் போலவே நாவலில் நிலமும் குறியீட்டு முறையில் அமைந்துள்ளது. நாவலின் பெரும்பொழுதான ஓரிடத்தில் இருளியின் வளர்ப்பு மகளான சுந்தரி வயதுக்கு வந்ததும் பள்ளியிலிருந்து அழைத்து வரும்போது வேனிற் காலத்தில் மலர்ந்து நிற்கும் கொத்துகொத்தான முள்ளுமுருங்கைக் குறியீடாகக் காட்டுவாள். இது வேனிற் காலத்தோடு தொடர்புள்ள பருவத்திற்குச் சான்றாக அமைகிறது. நாவலில் சிறுபொழுதான நண்பகல் பல இடங்களில் இடம்பெறுகிறது. உதாரணமாக பொன்னையா பிரசங்கியார் திருமணம் நடத்தி வைக்கும் இடத்தில் பிரச்சனை வரப்போய் பின்மதியம் நடத்தி வைக்கும் இடத்தைக் குறிப்பிடலாம். இதுகுறித்து நாவலில் "மணி ஒன்றரை தாண்டிவிட்டது. பிள்ளைகள் பசியால் வாடிவதங்கி கிடந்தனர்." (குமாரசெல்வா, குன்னிமுத்து 2012, ப:90) என்னும் இடத்தைப் பாலையின் வறட்சியோடு குறிப்பிடலாம்.

முடிவுரை

குமரிமாவட்டத்தில் உருவான நாவல்கள் திணைப் பொருண்மையின் அடிப்படையில் தொல்காப்பியம் கூறும் திணைக்கோட்பாட்டுடன் மிகவும் பொருந்துவதாக இக்கட்டுரையின் மூலம் நிறுவப்பட்டுள்ளது. இந்த இடத்தில் "தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளில் சுட்டப்பட்டுள்ள அர்த்தங்களை தெரிந்து கொள்ளும் வகையில் சில விமர்சன முறையியலை முன்வைக்கின்றனர்." (சிவசு. திணைத்திறனாய்வும் இமையத்தின் 'எங்கெதயும், 2019, ப:3) என்று கூறுவது மிகச்சரியாக இருக்கிறது.பெரும்பாலும் திணைசார்ந்த பொருண்மையிலான சமகால படைப்புகளிலெல்லாம் தொல்காப்பியம் வகுக்கும் திணைக்கோட்பாட்டின் அடிப்படைகள் மிகவும் பொருந்துவதாக அமைந்துள்ளன.

துணைநூற்பட்டியல்


1. அழகுமித்ரன், காட்டுத்தனம், சாய் கம்யூனிகேஷன்ஸ்.
   வேர்கிளம்பி, நாகர்கோவில், முதற்பதிப்பு, செப் : 2021
2. கிறிஸ்டோபர் ஆன்றணி, துறைவன், முப்பத்து மூன்றாம் தெரு. புழுதிவாக்கம்
   சென்னை – 600 005,
   முதற்பதிப்பு, நவ : 2015
3. குமாரசெல்வா, குன்னிமுத்து, கே.பி. சாலை. நாகர்கோவில் 629001.
   முதற்பதிப்பு, டிச : 2012
4. நாஞ்சில் நாடன்,மாமிசப்படைப்பு, விஜயா பதிப்பகம், கோவை - 1999.
5. பாலசுப்பிரமணியன், கு.வெ. சங்க இலக்கியக் கொள்கை, மீனாட்சி புத்தக நிலையம். மயூரா விளாகம், 48, தானப்ப முதலி தெரு. மதுரை - 625 001.
   முதற்பதிப்பு, ஏப்ரல் : 1993
6. ஜெயமோகன்,காடு, சேலவாயல், சென்னை : 51.


********* ********* ********** ********* ********* ********** ********** **********